ஆறாம் வகுப்பு

அலகு விபரம்	கற்றல் திறன்கள்	பாடப்பொருள்	கற்பித்தல் முறைகள்/ செயல்பாடுகள்	கற்பித்தல் கருவிகள்	பிரிவேளைகள்
1, எண்ணியல்	முழுக்கள் பற்றி அறிந்தவற்றை நினைவு கூறல் எண் பெயர்கள் எண்ணுருக்கள் நினைவு கூறல் முழுக்களில் நான்கு அடிப்படைச் செயல்களை அறிதல் (கூடுதற்பலன், பெருக்கற்பலன் ஆகியவை ஐந்திலக்கத்திற்கு மிகாது) சுருக்கு முறைகளைப் பயன்படுத்தி கணக்கிடல் அறிதல்	1.1 எண்களிலும் - திருப்புதல் நான்கு அடிப்படைச் செயல்கள் கணக்கிடுதலில் சுருக்கு முறைகள்	எண்களை எழுதுதல், படித்தல் இலக்க மதிப்பு காணல் நிரல்படுத்தி எண் செயல்களைச் செய்தல்	என் அட்டைகள் மணிச்சட்டம், புள்ளி அட்டை, ஜியோ போர்டு	60
	இயலெண்களை ஒற்றை, இரட்டை எனப் பிரிப்பதை நினைவு கூறல் பகா எண்களை அடையாளங் காணல், எண் அமைப்புகளைப் புரிந்து கொள்ளவும், அவற்றின் அழகினை அறியவும் தெரிந்து கொள்ளுதல் பகா எண்களை செவ்வக வடிவ அமைப்பில் அமைக்க இயலாதெனப் புரிந்து கொள்ளுதல்	1.2 எண் அமைப்புகள், மறுபார்வை முக்கோண, சதுர, கன எண்களுக்கு விரிவு படுத்தல்	புள்ளிகளைக் கொண்டு எண் அமைப்புகளை உருவாக்கவும் குறிப்பிட்ட ஒரு எண்ணைப் பல்வேறு அமைப்புகளில் அமைக்க மாணவரை ஊக்குவித்தல்	பொட்டுகள் ஒட்டுச் சீட்டுகள்	
	மீப்பெரு எண்களை அடுக்கு வரிசையில் அமைத்தல்	1.3 மீப்பெரு எண்கள்			
	குறிப்பிட்ட எண்களின் வகுபடுத்தன்மை விதிகளை நினைவுபடுத்திப் பயன்படுத்த அறிதல்	1.3 2, 10, 5, 4, 8, 3, 9, 11, 6 ஆகிய எண்களின் வகுபடுந்தன்மை மறுபார்வை	பெருக்கல் வாய்ப்பாட்டினை ஆய்ந்து அமைப்பு முறைகளை அடையாளங் காணல்	பெருக்கல் வாய்ப்பாட்டு அட்டவணை	
	மீசி.ம, மீ.பெ.வ. ஆகியவற்றின் அடிப்படைகளை நினைவுகூர்ந்து பயன்படுத்த அறிதல் வகுத்தல் முறையில் மீ.சி.ம. மீ.பெ.வ, காண அறிதல்	1.5 இரண்டு அல்லது மூனறு எண்களுக்கு மீ.பெ.வ மற்றும் மீ.சி.ம. காணல் - மறுபார்வை வகுத்தல்முறை அறிமுகம்	எண்களைப் பகா எண்களின் பெருக்குத் தொடராகத் தெரிவித்தல் ஈரிலக்க எண்களுக்கு மீ.பெ.வ. ஒன்று அல்லது இரண்டு படிகளில் காணல் எ.கா 24&36, 30&50 பின்னர் பெரிய எண்களுக்கும், மூன்று எண்களுக்கும் விரிவு படுத்துக		
	பின்ன எண்களின் அவசியத்தை உணர்தல் மீ.சி.ம. பயன்படுத்தி பின்னங்களில் அடிப்படைச் செயல்கள் செய்ய அறிதல்	1.6 விகித முறு எண்கள்: சாதாரண பின்னங்கள்,	வாழ்க்கைச் சூழலின்று எடுத்துக் காட்டுகள் தருதல் முதலில் ஒத்த பின்னங்கட்கும் பின்னல் ஒவ்வாத	காகித நீள் அட்டைகள், கட்டக் காகிதம் ஜியோ	

	10-ன் அடுக்குகளைப் பகுதியாகக் கொண்டவை தசம பின்னங்கள் என்று அறிதல் சாதாரண பின்னங்களை தசம பின்னங்களாவும் தசம பின்னங்களை மாற்ற அறிதல் இருவிகித முறை எண்களை ஒப்பிட அறிதல் சாதாரண, தச அ பின்னங்களில் நான்கு அடிப்படைச் செயல்களைப் புரிந்திட அறிதல்	தசம பின்னங்கள்- மறுபார்வை	பின்னங்கட்கும் விரிவுபடுத்துக மெட்ரிக் அளவை கட்கும் தசம பின்னங்கட்கும் உள்ள உறவைப் பயன்படுத்துக	போர்டு	
	முழு எண் கணத்தை விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை உணர்தல் முழுக்களை இறங்கு, ஏறு வரிசைகளில் அமைக்க அறிதல்	1.7 திசை எண்கள் திசை எண்களை எண் கோட்டில் குறிப்பிடுதல்	இலாப நிஷ்டம், உயரம் ஆழம்போன்ற வாழ்க்கையை ஒட்டிய நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தவும்	எண்கோடு கட்டக் காகிதம்	
	முழுக்களில் நான்கு அடிப்படைச் செயல்களைப் புரிந்திட அறிதல் இரு முழுக்களின் கூடுதல் வித்தியாசம் பெருக்கற்பலன் ஆகியவை மற்றொரு முழு எனவும், வகுத்தலின் விளைவு முழு ஆக இருக்க வேண்டியதில்லை எனவும் புரிந்து கொள்ளுதல்	திசை எண்களில் நான்கு அடிப்படைச் செயல்கள்	கிழக்கு மேற்கு என எண்கோட்டில் முழுக்களை கி.4 மே3 என முதலில் குறித்து, பின்னர் +4, -3 எனக் குறிப்பிடவும்		
2. அன்றாடக் கணக்குகள்	விகிதம் பற்றிய அடிப்படைகளை நினைவு கூர்தல் இரண்டு விகிதங்களை ஒப்பிட அறிதல் விகித சமத்தை உருவாக்க அறிதல் இவற்றை வாழ்க்கச் சூழலிற்குப் பயன்படுத்துதல்	2.1 விகிதம் விகித சமம் மறுபார்வை	பங்கு பிரித்தல் கலவைகள் போன்ற சூழ் நிலைகளைப் பயன்படுத்துதல்	கட்டக்காகிதம்	50
	100-ஐப் பகுதியாகக் கொண்ட பின்னமே சதவீதமெனப் புரிந்து கொள்ளுதல் இருவேறுபட்ட சாதனைகளை ஒப்பிட சதவீதம் ஒரு கருவி என அறிதலும், பயன்படுத்தலும்	2.2 சதவீதம் மறுபார்வை	தேர்வு மதிப்பெண் பட்டியல்கள் மூலம் சதவீதத்தின் அவசியத்தை உணர்த்தவும் கட்டக்காகிதத்தில் சதவீதங்களைக் குறித்தல்	மதிப்பெண் பட்டியல்கள் கட்டக் காகிதம்	
	கடை விற்பனைப்பட்டியல் சரிபார்க்க அறிதல் அவற்றின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளுதல் நான்கிற்கு மேற்படாத விற்பனைகட்கு விற்பனைப் பட்டியல் தயாரித்தல் (விற்பனை வரி நீங்கலாக) வட்டி எவ்வாறு கணக்கிடப்படுகின்றது என்று அறிதல் தனிவட்டி	2.3 கடைக் கணக்குகள்	கடை விற்பனைப்பட்டியல்களை மாணவர் பெற்று சரிபார்த்தல்	கடை விற்பனைப் பட்டியல்	

	மொத்தம் கணக்கிட அறிதல்				
		2.4. தனிவட்டி காணல் (மூன்று காலத்திற்கு மேற்படாது)	சதவீதத்தைப் பயன்படுத்தி படிப்படியாக தனிவட்டி காணுதல்		
3. அளவைகள்	மில்லி முதல் கிலோ வரை மெட்ரிக் வாய்பாடுகளை அறிதல் அலகுகளைச் சரியாகக் குறிப்பிடக் கற்றறிதல் மெட்ரிக் அளவைகளில் நான்கு அடிப்படைச் செயல்களைப் புரிந்திட அறிதல் ஆர்.ஹெக்டேர் ஆகிய பரப்பு அலகுகளையும் லிட்டர், கிலோ லிட்டர் ஆகிய கொள்ளளவுகளையும் அறிதல் கொள்ளவிற்கும் நீட்டல் அளவுகளுக்கும் உள்ள தொடர்பைக் காணல்.	3.1 மெட்ரிக் அளவைகள் நீட்டல் நிறுத்தல், கொள் அளவைகள் – மறுபார்வை பரப்பளவு கொள்ளளவு அலகுகளை அறிதல்	வாழ்க்கைச் சூழலில் அளவைகளைப் பயன்படுத்தல் வகுப்பறை, விளையாட்டரங்கு, மேஜை, இருக்கை ஆகியவற்றை அளத்தல் தண்ணீரை அளந்து 1 லிட்டம் 1000 கசெ மீக்குச் சமமென அறியச் செய்தல்	நிறுத்தல் நீட்டல் கொள்ளளவு கருவிகள் பரப்புகாண கட்டக் காகிதம்	
	ஒரு கால அளவையைப் பறி அளவைகட்கு மாற்ற அறிதல் லீப் ஆண்டு கணக்கிடும் முறையை அறிந்து லீப் ஆண்டுகளை அடையாளங்காண அறிதல்	3,2 கால அளவைகள் – வினாடி, வாரம் ஆண்டு, லீப் ஆண்டு	காலங்காட்டிகள், நாட்காட்டி	காலம் அளக்கும் கருவிகள், இரயில்வே கால அட்டவணை	
	செவ்வகத்தின் சுற்றளவு, பரப்பு காண அறிதல் செவ்வகம், சதுரம் ஆகியவற்றின் சுற்றளவு. பரப்பு காண உதவும் சூத்திரங்களைப் பெறுதல் மூலைவிட்டம் ஒரு செல்வகத்தை ஒரு சர்வசம் செங்கோண முக்கோணங்களாகப் பிரிக்குமெனப் புரிந்து கொள்ளுதல் ஒரு செங்கோண முக்கோணத்தின் பரப்பு அதனை உள்ளடக்கிய செவ்வகத்தின் பரப்பில் பாதி எனவும், ஆனால் சுற்றளவு பாதியல்ல எனும் புரிந்து கொள்ளுதல் ஒரு செவ்வக அறையின் நான்கு சுவர்களும் செவ்வக வடிவில் அமைந்துள்ளன எனப் புரிந்து கொள்ளுதல்	3.3 சுற்றளவு, பரப்பு செவ்வகம், செங்கோண முக்கோணம் நான்கு சுவர்களின் பரப்பு	கட்டக்காகிதங்களைக் கொண்டு செவ்வகம், சதுரம் செங்கோண முக்கோணம் ஆகியவற்றின் பரப்புகளைக் காணல் காகித மடிப்பின் மூலம் செவ்வகம் இரண்டு சர்வசம செங்கோண முக்கோணங்களை உண்டாக்குவதைக் காணல்	கட்டக்காகிதம் சாய்வு கட்டக் காகிதங்கள்	
4 இயற்கணிதம்	எழுத்துக்கள் எண்களுக்குப் பதிலாக இடம் பெறுகின்றன என்பதை	எண்களுக்குப் பதிலாக எழுத்துக்கள	வாழ்க்கைக் கணக்குகள் மூலம் இடம் பெறுதலை	கட்டக் காகிதம்	20

	அறிதலும் புரிந்து கொள்ளுதலும் கூட்டல் கழித்தல் விதிகளைப் புரிந்து கொள்ளுதல் அடுக்குகளின் பொருளை அறிதலும் புரிந்து கொள்ளுதலும்	ள பயன்படுத்தல் மாறிகள் குணகங்கள், அடுக்குகள் (மூன்றுபடி) வரை	விளக்குதல் எ..கா 7+8=15 வெவ்வகத்தின் பரப்பு A= lb		
5.வடிவியல்	சொற்களின் தன்மையை நன்கு அறிதல் அவற்றின் உட்பொருளைப் புரிந்து கொள்ளுதல்	5.1 அடிப்படைச் சொற்கள் புள்ளி, கோடு, கதிர், கோட்டுத் துண், தளம்	கரும்பலகைகளில் படம் வரைந்து சொற்களை விளக்கவும் குறிப்பிடப்படும் புள்ளி உண்மையில் வடிவியல் புள்ளி அல்ல என்றும், ஒரு தோராயக் குறியீடே எனவும் விளக்குதல்	கரும்பலகை எண்கோடு	
	இருபுள்ளிகள் ஒரு கோட்டைன நிர்ணயிக்குமெனப்புரிந்து கொள்ளுதல் ஒரு கோட்டில் அமையும் புள்ளிகள், ஒரு புள்ளி வழியே செல்லும் கோடுகள், இணைகோடுகள், செங்கத்துக் கோடுகள் ஆகியவற்றை அடையாளங்காணல் ஒரே முடிவுப் புள்ளியினின்று செல்லும் இரு கதிர்களுக்கிடையிலுள்ளது கோணத்தை உருவாக்குமெனப் புரிந்து கொள்ளுதல் கோணங்களின் வகைகளை அறிதல் கொடுக்கப்பட்ட கோணத்தின் நிரப்புக் கோணம் மிகை நிரப்பக் கோணம் ஆகியவற்றைக் காணுதல்	5.2 ஒரு கோட்டுத்தன்மை, ஒரு புள்ளி வழிக் கோடுகள், இணைத்தன்மை, செங்கோட்டுத்தன்மை 5,3 கோணங்கள் கோண அளவைகள் கோ வகைகள், செங்கோணம் குறுங்கோணம் பிரிகோணம் நிரப்புக்கோணம் மிகை நிரப்புக் கோணம் மறுபார்வை	கரும்பலகையில் படம் வரைந்து விளக்குதல் இப்பண்புகளைச் சரிபார்க்கும் முறைகளை விளக்குதல் கோணம் அமையும் முறையை கரும்பலகையில் விளக்குதல் அட்டை வடிவங்களின் மூலம் கோணங்களின் வகைகளைத் தெளிவுபடுத்தல் விரிகோணத்திற்கு நிரப்புக் கோணமில்லை என்றும், விரிகோணத்தின் மிகை நிரப்பி குறுக்கோணமென்றும், குறுங்கோணத்தின் மிகை நிரப்பி விரிகோணமென்றும் வரைந்தும், படங்காட்டியும் விளக்குதல்	காகித மடிப்புகள், நூல், குச்சிகள் வடிவியல் கருவிகள், காகித மடிப்புகள் அட்டை வடிவங்கள்	
	சமபக்க, இருசமபக்க, அசமபக்க, செங்கோண, குறுங்கோண, விரிகோண முக்கோணங்களை அடையாளங்காணுதல்	5.4.முக்கோணங்கள் அ) பக்கங்களின் நீளங்கள் ஆ) கோணங்களின் அளவுகள் அடிப்படையில்	அட்டை வடிவங்கள் குச்சிகளைக் கொண்டு முக்கோணங்கள் அமைத்தல்	அட்டை வடிவங்களின் குச்சிகள்	

		வகைப்படுத்துதல் மறுபார்வை			
	சிறப்பு நாற்கரங்களில், பக்கங்கள், கோணங்களிடையே ஒரு தனிப்பட்ட உறவுகளுள்ளன எனப்புரிந்து கொள்ளுதல்வெவ்வேறு வகை நாற்கரங்களை அடையாளங் காணுதல் பலவகை நாற்கரங்களை கட்டக் காகிதத்தில் வரைதல்	5.5 சிறப்பு நாற்கரங்கள் சதுரம் செவ்வகம், இணைகரம், சாய்வு சதுரம் பட்டம் சரிவகம் ஆகியவற்றின் பக்கங்கள். கோணங்கள், மூலை விட்டங்களைச் சார்ந்த பண்புகள்	காகித மடிப்பு கட்டக் காகிதம், கரும்பலகையில் படம் வரைதல் மூலம் சிறப்பு நாற்கரங்களின் பண்புகளை விளக்குதல்	சிறப்பு நாற்கர வடிவங்கள் காகித மடிப்புகள், குச்சிகள், கட்டக்காகிதம்	
செய்முறை வடிவியல்	கொடுக்கப்பட்ட கோட்டுத் துண்டின் நீளத்தைக் காண அறிதல் கொடுத்துள்ள அளவிற்குக் கோட்டுத் துண்டு வரையக் கற்றறிதல்	6,1 கோட்டுத்துண்டுகள் வரைதலும் அளத்தலும்	எண் கோட்டின் மூலம் நீளம் கருத்தை அறிமுகப்படுத்தவும் பிறகு அளவு கோலைப் பயன்படுத்தும் முறையைக் கற்பிக்கவும்	எண்கோடு அடிக்கோல்	
	கொடுக்கப்பட்ட கோணத்தை, கோணத்தை, கோணமாணியைக் கொண்டு அளக்க அறிதல் கொடுக்கப்பட் கோணத்திற்குக்கு கதிர்கள் வரைய அறிதல்	6,2 கோணங்களை வரைதலும் அளத்தலும் 90, 45, 30, 60 ஆகிய கோணங்கள் மட்டுமே	காகித மடிப்பு முறையின் மூலம் கோணங்களை உருவாக்குதல் கோணமானியை பயன்படுத்துதல்	காகித மடிப்பு கோணமானி	
	ஒரு கோட்டுத் துண்டின் இரு முனைகளை ஒன்று சேர்த்து மடிக்க, மையக்குத்துக் கோடு பெறட்டுமென் அறிதல்	6,3 கோட்டுத் துண்டின் மையக் குத்துக்கோடு வரைதல்	காகித மடிப்பு முறையின் மூலம் விளக்குதல்	காகித மடிப்பு	
	ஒரு கோணத்தின் இரண்டு கதிர்களையும் ஒன்று சேர்க்க கோணத்தின் இருசமவெட்டி கிடைக்குமென அறிதல்	6.4. கோணத்தின் இரு சமவெட்டி வரைதல்	காகித மடிப்பு முறையின் மூலம் விளக்குதல்	காகித மடிப்பு	
7. விவரங்களைக் கையாளுதல்	கொடுக்கப்பட்ட விவரங்களுக்கு முகடு, இடைநிலை, கூட்டுச் சராசரி ஆகியவற்றைக் காண அறிதல் பல்வேறு சராசரிகளை ஆய்ந்து, குறிப்பிட்ட சூழ்நிலைக்கு மிகப் பொருத்தமான அளவைத் தேர்ந்தெடுத்தல்	7.1 சராசரிகள் - முகடு, இடைநிலை கூட்டுச் சராசரி	மதிப்பெண் பட்டியல், மாணவர் உயர், எடை போன்ற அளவுகளுக்கு சராசரிகளைக் காணல் சராசரிகளை ஒப்பிடுதல்	வகுப்பறை மாணவர் பற்றிய விவரங்கள	14

	கொடுக்கப்பட்ட விளக்கப்படத்தைப் பார்த்து விவரங்களை விளக்கத் தெரிதல் படத்தைப் பார்த்து வேண்டிய விவரங்களைப் பெற அளிதல்	7.2புள்ளியியல் வரைபடங்கள் படவிளக்கம், செவ்வக விளக்கப் படம் மழை, வெப்பம் தட்ப அளவைகள் - ஆகியவற்றைப் படித்தலும் விளக்குதலும் (படங்கள் வரையத் தெரிய வேண்டியதில்லை)	வகுப்பறை மாணவர் பற்றிய புள்ளி விபரங்கள் தேசப்படப் புத்தகத்திலுள்ள படங்கள்	தேசப்படப்புத் தகம்	
				மொத்தம்	224